பதற்கு உட்பட்டும், தஞ்சாவூர் மாவட்டத்தில் கூடுதலாகத் தொழிற் பயிற்சிப் பள்ளிகள் தொடங்குவது பற்றி ஆலோசிக்கப்படும். மேற்படி நிலைமை தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு 1967-ம் ஆண்டு நவம்பர் மாதம் 8-ம் தேதி அன்றே தெரிவிக்கப்பட்டுவிட்டது.

A.—(*a*) Yes.

(*b*) At present 2 Industrial Training Institutes are functioning in Thanjavur district. The Fourth Plan proposals relating to Craftsmen Training Programme have not yet been formulated by the Government of India. The question of starting of additional Industrial Training Institutes in the Thanjavur district will be considered on the basis of the needs of the District as a whole and subject to the availability of funds. The Collector of Thanjavur was informed of the above position on 8th November 1967.

[*குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி* இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].

2. நடைமுறைக் கேள்விகள்.

(i) வினுக்களுக்கு விடை அளிப்பதில் தாமதம்

திரு. சோ. அழகர்சாமி : பாயின்ட் ஆஃப் இன்பர்மேஷன், சார் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பாயின்ட் ஆஃப் இன்பர்மேஷனுக்கு இடம் இல்லை.

திரு. சோ. அழகர்சாமி : பாயின்ட் ஆஃப் ஆர்டர், சார். நான் கேள்விகள் அனுப்பி ஆறு மாதங்களுக்கு மேலாகி விட்டது. இரண்டு கூட்டத் தொடர்களும் நடந்து முடிந்துவிட்டன. என்னுடைய கேள்விகள் இன்றும் வரவில்லை. அடுத்த கூட்டத்திலாவது என்னுடைய கேள்விகள் வருமா ? ஒரு மாதத்திற்குள்ளாகவாவது வருவதற்கு வழி செய்யப்படுமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்விகள் கொடுத்து, அதற்கு விடை வேண்டுமென்பதை பேரவைத் தலைவரின் அறையிலே கேட்க வேண்டும். உறுப்பினர்கள் கேட்கும் கேள்விகளுக்கான பதில்களை விரைவிலே கொடுப்பதற்கான வழிவகை செய்யப்படும்.

(ii) வெள்ளிக் குறியிட்ட வினுவை வெள்ளிக் குறியிடாத வினுவாக மாற்றல்

THIRU K. VINAYAKAM : Sir, my point of order is this. I had given notice of many questions and particularly named them as starred questions, and I wanted them to be answered on the floor of the House. But without taking my permission or even consulting me, the Hon. Speaker has ordered that they should be printed as unstarred questions. Sir, these questions are of major public importance calling for more details and that they will educate not only the public but also the hon. Members of this House. On what authority were my questions printed as unstarred questions ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்விகளை "ஸ்டார்டு கொஸ்டினுக" எழுதிக் கொடுக்க வேண்டும். "ஸ்டார்டு கொஸ்டின்களை கூட "அன்-ஸ்டார்டு கொஸ்டின்"களாக மாற்றுவதற்கு "ஸ்பீகருக்கு" உரிமை இருக்கிறது. ஏற்கெனவே அனுமதித்த "ஸ்டார்டு கொஸ்டின்" களைக்கூட "அன்-ஸ்டார்டு கொஸ்டின்"களாக மாற்றுவதற்கு விதிமுறைகள் இருக்கின்றன. எதற்காக அப்படி ஆக்கினீர்கள் என்ற கேள்வியை எழுப்புவது முறையாகாது.